பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
12 04 2025 **SATURDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வர்த்தக ஒப்பந்தத்திற்கான காலக்கெடு விதிக்கும் நாடுகளுடன் இந்தியா ஒரு போதும் தனது நலனை சமரசம் செய்து கொள்ளாது என்று மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

2. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் இந்தியாவுடன் அமெரிக்கா ஒத்துழைத்து செயல்பட்டு வருவதற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

3. தெலங்கானாவில் தடை செய்யப்பட்ட மாவோயிஸ்ட் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 22 பேர் காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

4. மேற்காசியாவில் பதற்றத்தை தணிக்கும் வகையில் ஈரான்- அமெரிக்கா இடையேயான பேச்சுவார்த்தை இன்று ஓமனில் தொடங்கவுள்ளது..

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

>>>>>>>><<<<<<<<

வர்த்தக ஒப்பந்தத்திற்கான காலக்கெடு விதிக்கும் நாடுகளுடன் இந்தியா ஒரு போதும் தனது நலனை சமரசம் செய்து கொள்ளாது என்று மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற 9வது உலக தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் பேசிய அவர், பொதுவாக வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளும் போது, பரஸ்பரம் இருதரப்பும் பலனடைய வேண்டும் என்று தெரிவித்தார்.

உலக வர்த்தகத்தை மாற்றியமைக்கும் திசையில் இந்தியா பயணிப்பதாகவும், இதனால் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் இந்தியாவை நம்பகமான நாடாக கருதுவதாகவும் அவர் கூறினார்.

வரியற்ற வர்த்தக உடன்பாட்டில் இந்தியா தனது நலனை விட்டுத்தராது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்யும்போது, சமமான போட்டியும் பரஸ்பர நலனும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

ஐரோப்பிய யூனியன், பிரிட்டன், அமெரிக்க உள்ளிட்ட பல நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தையில் இந்தியா தற்போது ஈடுபட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியனுடன் வரியற்ற வர்த்தக உடன்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், வர்த்தகம் அல்லாத பிரச்சினைகள் இணைக்கப்படும் போது, அவைகள் சவாலாக உள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

>>>>>>>><<<<<<<

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் இந்தியாவுடன் அமெரிக்கா ஒத்துழைத்து செயல்பட்டு வருவதற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டு மும்பையில் நிகழ்த்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலுக்கு முக்கிய காரணமான தஹாவூர் உசேன் ராணா-வை நாடு கடத்தியது குறித்து சமூகவலைதளத்தில், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் திரு. **Marco Rubio** தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கையில் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்வதில் இந்த நடவடிக்கை முக்கியமானது என்றும் திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

மும்பை தாக்குதல் சம்பவத்தை திட்டமிட்டதில் முக்கிய நபராக, ராணா திகழ்ந்தார் என்றும், இந்த தாக்குதலில் உயிரிழந்த 166 பேரின் குடும்பத்திற்கு நீண்டகாலமாக கிடைக்காமல் இருந்த நீதியை உறுதிப்படுத்தும் வகையில் அமெரிக்கா இந்தியாவுடன் இணைந்து பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் ஒத்துழைத்தது என்றும் திரு. ரூபியோ தெரிவித்துள்ளதையும் திரு. ஜெய்சங்கர் தமது பதிவில் சுட்டிக்காட்டி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<

குடியரசுத்தலைவர் திருமதி, திரௌபதி முர்மு, போர்ச்சுகல் மற்றும் ஸ்லோவாக்கியா நாடுகளில் மேற்கொண்ட அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றிரவு புதுதில்லி திரும்பினார்.

போர்ச்சுகல் மற்றும் ஸ்லோவாக்கியாவுடன் இந்தியாவின் உறவுகளை வலுப்படுத்தும் வகையில் அந்நாடுகளின் தலைவர்களை குடியரசுத்தலைவர் சந்தித்துப் பேசினார்.

>>>>>>>><<<<<<<<

தெலங்கானாவில் தடை செய்யப்பட்ட மாவோயிஸ்ட் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 22 பேர் காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

இந்த அமைப்பின் புரட்சிகர மக்கள் குழுவைச் சேர்ந்த 18 பேரும் இதில் அடங்குவர் என்றும், இவர்கள் **Mulugu** மாவட்ட காவல்துறையினரிடம் சரணடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சரணடைந்தவர்களில் 3 மாவோயிஸ்ட்டுகள் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான பல்வேறு மோதல் சம்பவங்களில் பல ஆண்டுகளாக தேடப்பட்டு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சரணடைந்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் என்றும், அவர்களது குடும்பத்தினருடன் அமைதியான வாழ்க்கையை வாழ்வதற்கு தேவையான உதவிகள் செய்யப்படும் என்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. சபரிஷ் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அஇஅதிமுக மீண்டும் இணைந்தது குறித்து பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள மற்ற கட்சிகளுடன் இணைந்து, தமிழ் நாட்டை முன்னேற்றத்தின் புதிய உச்சங்களுக்கு கொண்டு செல்வோம் என்று சமூகவலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி, மறைந்த எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதாவின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றும் அரசை ஏற்படுத்த உறுதியேற்போம் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

இதற்கிடையே, தேசிய ஜனநாயக கூட்டணியில் தங்களை இணைத்துக் கொண்டதற்காக பிஜேபி மூத்த தலைவர் திரு. நரேந்திர மோடிக்கு அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி நன்றி தெரிவித்துள்ளார்.

வாரிசு அரசியல், ஊழல், தவறான நிர்வாகம் இல்லாத தமிழ்நாட்டை ஏற்படுத்த இந்த கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் உறுதிபூண்டுள்ளதாகவும், வெளிப்படையான மற்றும் வளர்ச்சியை மையமாக கொண்ட அரசு மாநிலத்தில் அமைவதை இந்தக் கூட்டணி உறுதிப்படுத்தும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இந்நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணியில் அஇஅதிமுக இணைந்தது குறித்து திமுக விமர்சனம் செய்துள்ளது.

பிஜேபி-யுடன் அஇஅதிமுக மறைமுக கூட்டணி வைத்திருக்கிறது என்று பல நாட்களாக திமுக கூறிவந்தது நேற்று நிரூபணமாகியுள்ளதாக திமுக மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி. கனிமொழி கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<

மேற்காசியாவில் பதற்றத்தை தணிக்கும் வகையில் ஈரான் – அமெரிக்கா இடையேயான பேச்சுவார்த்தை இன்று ஓமனில் தொடங்கவுள்ளது.

அணுசக்தி தொடர்பான புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்த இந்த பேச்சுவார்த்தை உதவும் என்று இருதரப்பிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. அபாஸ் அரகாச்சி தலைமையிலான குழுவினரும், மத்திய கிழக்கு பகுதிகளுக்கான அமெரிக்க சிறப்பு தூதர் திரு. **Steve Witkoff** தலைமையிலான குழுவினரும் இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்கின்றனர்.

இந்த இரு குழுவினருக்கும் இடையே ஓமன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Badral Busaidi** மத்தியஸ்தராக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அணுசக்தி தொடர்பாக ஈரான், இரண்டு மாதத்திற்குள் ஒப்பந்தத்திற்கு முன்வரா விட்டால், கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் ஏற்கனவே எச்சரித்திருந்தார்.

**>>>>>>>><<<<<<<**

கோடை காலத்தை முன்னிட்டு, பொதுமக்களின் வசதிக்காக பெங்களூரு - பெலகாவி மற்றும் பெங்களூரு – எர்ணாகுளம் இடையே சிறப்பு ரயில்களை இயக்க தெற்கு ரயில்வே முடிவு செய்துள்ளது.

பெங்களூரு - பெலகாவி சிறப்பு ரயில் இன்று நண்பகல் 12 மணிக்கு பெங்களூருவிலிருந்து புறப்பட்டு, இரவு 11.30 மணிக்கு பெலகாவி சென்றடையும்.

பெங்களூரு – எர்ணாகும் சிறப்பு ரயில் இன்று மாலை 4.35 மணிக்கு புறப்பட்டு நாளை அதிகாலை 3 மணிக்கு எர்ணாகுளம் சென்றடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>>>><<<<<<<**

மத்திய ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான **Gabon-**ல் புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.

இந்நாட்டில் பல ஆண்டுகளாக **Bongo** வம்சத்தினரின் ஆட்சி நடைபெற்று வருகிறது.

இந்த ஆட்சி நீடிக்குமா அல்லது ஜனநாயக ரீதியில் அரசு அமையுமா என்பது இன்றைய தினம் நடைபெறும் தேர்தலில் மக்கள் தீர்மானிப்பார்கள் என்று அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

56 ஆண்டுகளாக இந்நாட்டில் வாரிசு அரசியல் நீடித்து வந்த நிலையில், ராணுவம் ஆட்சியை கவிழ்த்து, அதிகாரத்திலிருந்து போங்கோ வம்சத்தினரை அகற்றிய பின்னர், 19 மாதங்கள் கழித்து இந்த தேர்தல் நடைபெறுகிறது.

>>>>>>>><<<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய சென்னை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 103 ரன் எடுத்தது.

104 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய கொல்கத்தா அணி 10 புள்ளி ஒரு ஓவரில் 107 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

லக்னோவில் இன்று மாலை மணி 3.30-க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் லக்னோ அணி — குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாதில் இரவு மணி 7.30-க்கு நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் ஹைதராபாத் அணி — பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>>><<<<<<<

உலக கோப்பை வில்வித்தைப் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஜோதி சுரேகா — ரிஷப் யாதவ் இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போடடியில் இந்த இணை ஸ்லோவேனியாவின் இணையை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியதன் மூலம் இப்போட்டியில் இந்தியாவுக்கு 3வது பதக்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தகுதிச் சுற்றில் 5வது இடத்தில் இருந்த ஜோதி - ரிஷப் இணை, தொடக்கச் சுற்றில் ஸ்பெயினையும், காலிறுதியில் டென்மார்க்கையும் வீழ்த்தியது.

கடைசி நான்கு சுற்றில் ஸ்லோவேனியாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

>>>>>>>><<<<<<<

அர்ஜென்டினாவில் நேற்று நிறைவடைந்த உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா 4 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் என எட்டு பதக்கங்களை வென்றது.

பதக்கப்பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியின் இரண்டாவது கட்ட போட்டிகள் பெரு தலைநகர் **Lima**-வில் நாளை தொடங்கவுள்ளன.

**>>>>>>>><<<<<<<<**